**விருதுநகர் மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை**

**(செப்டம்பர் 5-ம் தேதி முதல் செப்டம்பர் 9-ம் தேதி வரை)**
**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்,**
**தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (1.9.15- 3.9.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 6.4 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 38- 39 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24- 26 |
| வானம் (ஆக்டா) | 4- 7 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 53- 74 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 38- 65 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 9- 11 |
| காற்றின் திசை | 110- 160 |

**9.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1<br>5.9.15 | நாள் 2<br>6.9.15 | நாள் 3<br>7.9.15 | நாள் 4<br>8.9.15 | நாள் 5<br>9.9.15 |
| மழை (மி.மீ.) | 7 | 3 | 3 | 0 | 0 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 38 | 38 | 38 | 39 | 39 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 24 | 24 | 25 | 25 | 25 |
| வானம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 58- 68 | 58- 70 | 56- 70 | 56- 68 | 56- 68 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 9/ தெற்கு | 9/ தெற்கு | 9/ தெற்கு | 9/ தெற்கு | 9/ தெற்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| வடகிழக்கு பருவமழை பருவ சாகுபடி | நிலம் தயாரித்தல் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் இலேசான மழையை பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்யவும்.<br>மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்கும் முறையாக |

| | | |
|---|---|---|
| | | நிலத்தை சட்டிக்கலப்பையை பயன்படுத்தி ஆழமாக உழவு செய்யவும். கடைசி உழவிற்கு முன்பு தொழு உரம் அல்லது கம்போஸ்ட் 12.5 டன்/ எக்டர் என்ற அளவில் இடவும். ரோட்டோவேட்டர் கருவியை பயன்படுத்தி நிலத்தை நன்கு பண்படுத்தவும். |
| | இடுபொருட்களை தயார்படுத்துதல் | மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்களை வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும். |
| | இரகங்களை தெரிவு செய்தல் | மானாவாரியில் வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் பயிரிட பயிர் சாகுபடி பருவத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை எதிர்த்து வளரும் இரகங்களை தெரிவு செய்யவும். பருத்தியில் KC 3, மற்றும் PA 255, மக்காச்சோளத்தில் CoH(M) 6, சோளத்தில் K 8 மற்றும் K 12, பாசிப்பயிரில் CO 6, சூரியகாந்தியில் CO 4, கம்பில் CO(Cu) 9, எள்ளில் TMV 3, கொத்தமல்லியில் CO 4, சென்னாவில் KKM 1 ஆகிய இரகங்கள் மானாவாரிக்கு உகந்தவை. |
| தக்காளி, மிளகாய் | காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் காய்க்கும் பருவத்திலுள்ள தக்காளி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்க்கவும். |

குறுஞ்செய்தி-: செப்டம்பர் 5- 7ம் தேதி வரை: 7, 3& 3 மி.மீ. மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்க நிலத்தை சட்டிக்கலப்பை கொண்டு உழவு செய்யவும். தொழு உரம் 12.5 டன்/எக்டர் இடவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி